உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

ஆண்டு ௯	யுவ மாசி—1936— பிப்ரவரி	திங்கள் ௭

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

தனவணிக சமூக நிலை.

(௧௨௮-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் திருப்பூட்டுகிற பட்டு இராசியுள்ளது என ஒரு கும்பகோணம் பட்டையே உபயோகித்து வந்தார்கள். இந்தக் காலத்தில் அதுவும் புதிதுபுதிதாக வயிரநகைகளும் புதிது புதிதாகப்பெரும்பணம்கொடுத்துவாங்கித்தானைகவேண்டுமென்கிறார்கள். அப்படித்தானாகிறது. பெண்ணைப் பெற்றோர்க்கும்கொடுத்து பெண்ணுக்குப் பூணும் பணிகளும் செய்ய அதிகப்பணம் வேண்டியதாகிறது. பெண்ணுக்குப் பணம் இவ்வளவென்று எழுதவும்நடுக்கம்; எழுதாமல் விடவும்கூடவில்லை; பெரும் பணம் பன்னீராயிர வராகன் கொடுப்பவனே பெண்ணுக்குரிய புருடனாவான் என்னும் பயித்தியக்காரச் சுயம் வரத்தை நாட்டுகின்றனர். இப்பண வலையில் பெண்கள் கிடைப்பதுமுண்டு. சில சமயங்களில் பிசாசுகளாக வந்து சேர்வதுமுண்டு. நிலுவைச் சனியனை விலை கொடுத்து வாங்கினாற்போல இந்தச் சனியனை ஏன் கொண்டோமென தம் தலைவிதியை நொந்து தயங்குவாருமுளர்.

பெரும் பணங் கொடுத்துக் கொண்ட பெண் பிணங்கினாலும் கோணங்கினாலும் செத்துப்போனாலும் கெட்டுப்போனாலும் கொடுத்த தொகைபோனது தானே. பெரும் பண மதிப்புள்ள

எத்தனை பெண்கள் பார் தெகிடி உன்னைப் பறக்கவிட்டுபோகிறேனென்று பயமுறுத்த அப்பேதையரைக்கொண்ட புருஷர் என்னைக் காப்பாற்றவேண்டும் தெய்வமே என்று நயந்து ஒருவழுக்க மற்ற திருவிளக்கந் தண்டைப் போன்ற அப்பெண்டிரை உன்னைப் போல வுண்டா உத்தமி இவ்வுலகில் என்று தலைமீது தூக்கியாட வேண்டியவர்களாகின்றனர். அதுபோது, "ஐயருக்கமுதுபடையென்று வந்தாய்நீயு மாண்பிள்ளை யென்றெண்ணை[illegible]ர், வரிசியெங்கே பானைசட்டியெங்கே யென்பளவள் சொன்னவகைக்கெல்லாம்-பையவே கொண்டு வந்தாலும் சமைக்கப்படாது • தலைநோகுதென்று, பாயிற்கிடப்பள் சினமாயொன்று பேசினல் பாருனக்கேற்ற புத்தி-செய்ய வல்லேனென்பள் சற்றடித்தா ஸஞ்சுதின்கிறேன் கூகூவெனத், தெருவீடுதோறு முறையிடு பெண்டீருண்டெனில் தீயநமன் வேறுமுண்டோ-வையகம் புகழ்சோலை மலையலங்காரனே மளவாள நாராயணன், மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே வரதவேங்கடராயனே" என்று கூறிய மணவாள பாரதியாரின் சதகப் பாவின் கருத்து இதயத்துதிக்கும்.

அவரவர் தகுதிக்கேற்ற சம்பந்தம் செய்து வந்த சமூகம் தகுதிமாறிச் செய்ய வாரம்பித்துவிட்டது. ஆனல் பணக்காரர் வீட்டுப் பெண்ணை ஏழ்மையான வீட்டில் கட்டி உதவி புரிதல் அருமையினும் அருமை. எளிமையுடையார் பெண்களைப் பணக்காரர் வீட்டில் கட்டும் மோகம் மிகுத்தது. தகுதிக்குத்தக்க இடம் போதாதாவென்றால் பெண்ணையாவது பெரிய இடத்தில் கட்டிப் பெருமை பெறலாகாதா வெனக் கழறுவாராயினர்.

இப்போது பெண் குறைவோ? இல்லை. பணம் முன்போலக் கொடுப்பாருமில்லை. கொடுப்பதற்குமில்லை. ஆசையலைக்கிறது. தங்கள் பிள்ளைக்குக் கொடுத்துக்கொள்வதற்காகப் பெண்ணுக்கு வாங்கத்தானே வேண்டுமென்ற எண்ணம் வலுக்கிறது. பெண்ணுக்குப் பணம் ஏற்ன முறையே இறங்க வாரம்பித்துவிட்டது. இனி அறவே ஒழிந்து முறையே கல்யாணம் செய்யப்பெறும் காலத்தை அணிமையில் காணலாம்.

காலகதியால் நன்மையான பழக்க வழக்க ஒழுக்கங்கள் பல மாறுதலடையவே ஆடவர்பெண்டிராதிய இருதிறத்தாரும்ஆடம்பர வாழ்க்கையை விரும்பினர்; செட்டுங் கட்டும் சிதைந்தன.

"இடம்பட வீடிடேல்" என்ற ஔவையாரருள் வாக்குக்கு மாருகதங்களால்கூட்டி மெழுகிவிளக்கேற்றிக்குடியிருந்துவாழ்தற்கு அதிகப்படியான அளவில் பல வீடுகளைப் பெரிது பெரிதாகக் கட்டலாயினர். போட்டிபோட்டுத் தளத்தை உயர்த்தி, முகட்டை உயர்த்தி, சுவர்களைத் தரைகளைச் சங்குவெள்ளைகளால் பளிங்குக் கற்களால் பள பளப்பாக்கி, பல வருணங்களால் சித்தரித்து பெரும்

பண்ணங்களைச் செலவிடலாயினர். ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு டெலிபோன் வைத்துப் பேசவும், நெய்விளக்குகளை நீக்கி மின்சார விளக்குகளை நோக்கி, கண்ணுக்கு கண்ணாடி போடவும் வருடவாரி பழுதுபார்க்கச் செலவு செய்யவும் வீட்டுக்குத் தகுந்த வாடகை மதித்து வருமான வரிக்கட்டவும் நேர்ந்தன. கல்லும் முள்ளும் மலிந்து பாலைநிலம் போன்றுள்ள கானகத்தில் சிறு கிராமங்களைப் பெருநகரங்கள் போலாக்கப் பல கோடி திரவியங்கள் செலவாயினவே! சிறுகக் கட்டிப் பெருகவாழலாகாதா?

அடக்க ஒடுக்கமாக ஆடையணிந்துவந்த இச்சமூகத்தில் ஆடம்பர உடைகள் வந்துபுகுந்தன. ஒருபட்டுப்புடவைக்குஓராயிரத்தைஞ்னூறு ரூபாவரை கொடுத்துவாங்கப்பெற்றன. இப்படித்தாவாரியாக எத்தனை புடவைகளைக் கணக்கில்லாமல் வாங்கியடைகின்றனர்? ஐயோபாவம்! ஒரு அந்துநிறைல் அழிந்து போகும் சேலைக்கு இவ்வளவு பெரும்பணம் போடுதல்வீண்செலவல்லவா? இந்த ஒருசேலை வாங்கும் பணத்தை மூலதனமாக வைத்து அதன் வருவாய் மூலம் ஒரு குடும்பத்திற்குப்போதிய வேட்டி சேலைகள்வாங்கிஉபயோகித்து வாழலாகாதா?

வயிர நகை பூண்பதால் வயிறு நிரம்புமா? வாழ்க்கை சிறக்குமா? இல்லை. இதனால் கோடிக்கணக்கான பணம் வெளிநாட்டுக்குப் போய் விட்டதே! இந்த வெள்ளைக் கற்பணதி வேண்டாமென்றால் நம்பொருள் வெளியே போகாது; கள்வர் பயம் நேராது; கவலைக்கிடமிராது. மாங்காய் மாலை என்னும் ஒன்று வந்து வாரிக் கொண்டு போன பணமும் அளவில்லாதனவே. ஒவ்வொரு குடும்பத்தினரும் நகைகளுக்குக்கொடுக்கும்கூலிப்பணமே ஆயிரக்கணக்கிலாகின்றது. கூலிப்பணத்தாவிலே குடும்பத்திற்குப் போதிய பொற்பணதி பூண்டு புனிதவாழ்வுறலாகாதா? தங்கத்திற்குப் பங்கமில்லையல்லவா? பண்டை வழக்கமும் நூல் விதியும் பொற்றாலியேயாம்.

வேகமா யோடும் விசை வண்டி வரக் கண்டு அதிமோகங் கொண்டு பெரும்பொருள் போட்டு வாங்கிப்பெருவாரி எண்ணெய்களைப்பெய்து செலவழிந்துபோனதிரவியம் பலகோடிரூபாகளாகும். ஒரு விசை வண்டிக்கு உபசாரமும் அதன் தேய்மானமும் வண்டி ஓட்டி சம்பளமும் வரிச் செலுத்துவதுமாக மாதம் ஒன்றுக்கு ரூபா முன்னூறு வீதமாகலாம். வண்டி ஓட்டி தினகாலம் வந்து டயர் போச்சு, டியூப் போச்சு, ஒயர் போச்சு, பல்ப் போச்சு, டேஞ்சர் லைட் போச்சு, டாப் லைட் தீஞ்சுபோச்சு, பேரிங்உடைந்து போச்சு, ஹாரன் கெட்டுப்போச்சு, அதுபோச்சு இதுபோச்சு வேறு என்னென்னவெல்லாமோ போச்சு என்றெல்லாம் வாய்க்கு வழங்காத கொச்சை மொழியால் அவமே இழவு சொல்லிக்கொண்டிருப்பான்; போனதோடன்றி வேகமான கார் போய்க் கொண்டிருக்கிற வரை

விரைவாகக்காசும் போய்க்கொண்டேயிருக்கின்றன. கட்டைவண்டி கெட்டுப்போனாலும்தெப்பக்கட்டை, அச்சு, நுகத்தடி, பட்டா,மற்றும் பழுதுபோனசக்கரம், பார்முதலியன பத்து ரூபாகளுக்காவது தேறும். விசை வண்டி கெட்டாலோ ஒரு கட்டைப் பாறைக் கம்பிக்குக்கூட ஆகாமல் கழுகுகளால் தசைகள் பிடுங்கித் தின்னப் பட்டுக்கிடக்கும் பிணத்தின் என்புக் கூடுபோல இடத்திற்கு அடைசலாய்க்கிடக்கும். இந்தவிசைவண்டிமோகம் விட்டால் எத்தனையோ காளைமாடுகள் குதிரைகள் வயிறுர வுண்டு வண்டியிழுத்து வாழுமே? வீணே பொருள் வெளி நாட்டுக்குப் போய்விழாதே?

பாத்திரங்களுக்கு ஒரு எல்லையுண்டா? வெள்ளி, வெண்கலம், ஈயம், தாம்பிரம், அலுமோனியம், மங்கு, கல்லு, மண்ணு, மரம் ஆதிய எல்லா வகைப் பாத்திரங்களும் ஒவ்வொரு வீட்டிலும் வாங்கி நிரப்பியிருப்பவைகள் பல நூறு கடைகளிற் கூட இராதென்னலாம். மெத்தை, தலையணைகள், பாய், தடுக்குகள், பந்திப் பாய்கள், சமக்காள விரிப்புகள், ரெட்டுகள், இரத்தினக் கம்பளங்கள், சால்வைகள், பீதாம்பரங்கள் ஆதியவைகளில் ஒவ்வொரு வகைக்கு எத்தனை எத்தனை யென்று கணித்தற் கரிதே. இவைகளை அளவுக்குமேல் வாங்குவதும் அடைவதும் நிலைவிளக்குமுதல் எலியிடுக்கிவரைபல பொருள்களையும் பல ஆண்டுகள் தேடிச்சேகரித்து அபரிமிதமாகப் பரப்பிப் பொருட் காட்சி காட்டுகின்றனர். இவ்வளவு பெருமிதமான பொருள்களின் அளவைசொல்லுந்தரமன்று; எழுதுந்தரமன்று. வரிசைப்படுத்திப் பட்டோலை ஏழுதுவதும் கல்யாணமாதியவைகளில் எத்தியிறக்குவதும் எவ்வளவு அலுப்பு என்பதுஅனுபவித்தவெவ்வொருவரு மறிந்ததே. தேவையுள்ள அளவு அவ்வப்போது புதிது புதிதாய் வாங்கி உபயோகிக்கலாகாதா?

சுபாசுபங்களுக்கு நாட்கள் எத்தனை? வேலைஆட்கள் எத்தனை? ஆரவாரங்கள் எவ்வளவு? சோறு கறி குழம்புகளின் எண்ணிக்கை தான் சொல்லுந் தரத்தனவா? பலகாரவகைகள், பழவகைகள், பானக வகைகள், போதாக்குறைக்குப் பணங்கள், பெட்டிகள், சட்டிகள், சீனி, தேங்காய், பாக்கு, வெற்றிலைகளுக்கு ஓரளவு ஏதேனுமுண்டா? வாணம், மத்தாப்புகள், பியாண்டு, மேளம், சதுர், அபிநயம், பாட்டு, கதை, சலதரங்கம், மிருதங்கம், புல்லாங்குழல், கிராமபோன், கெஞ்சிரா, பிடில், வீணை, ஆர்மோனியம் ஆதிய கச்சேரிகளுக்கு வீணே செலவுசெய்யும் பணங்கட்குத்தான் எல்லையுண்டா? இவ்வளவு தடபுடல்களாகயிருந்தாலும் சுபாசுபங்கட்கு வருபவர்கள் தங்குவதுண்டா? தரிப்பதுண்டா? கதை கச்சேரிகளைக் கேட்பதுண்டா? பார்ப்பதுண்டா? இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் செய்வானேன் என்று கேள்வி கேட்பாடாயினும் உண்டா? ஒன்றுமில்லை. வேலையற்ற பெண்டுகளும் சீட்டாட்டக்

காரர்களுமே நாட்கழிவுக்குவருந்தாதிருந்துவருவர். பழங்காலத்தில் பங்காளிகள், ஒற்றுமையாக வந்து கூடுவர்; பண்டபலாதிகள் வாங்கிக்கொண்டு வந்து சேர்ப்பர்; காய் கறி திருத்திக் கொடுப்பர்; பந்தி பரிமாறி விருந்து விசாரணை செய்வர்; பல காரியங்களையும் குறைவறக் கவனித்து நடத்துவர். பெண்களும் தங்களால் கூடியவைகளை அளவோடு செய்து பந்தி பரிமாறுவர். வேலைக்கு ஆள் அதிகம் சேர்ப்பதில்லை. உணவாதியவை புனிதமாகயிருக்கும். அதற்கு மாறாக வேலையாட்களைச் சேர்த்து அதிகப்படியாகச் செய்து அல்லல்பட்டு பாழில் அள்ளிக் கொட்டுகிறார்களே! அளவுபடுத்திக்கொள்ளலாகாதா? "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாமன்றோ"?

சம்பந்தியாளைத் திருப்திபண்ணுவதுதான் சாமான்யமா! நெல்லாய்ந்து கல்லாய்ந்து அரிசி பருப்பு ஆதியவைகளை மூட்டை மூட்டையாக கடகம் கடகங்களாக பற்பல தகரங்களாகக்கொண்டுவந்து கொட்டிக் கட்டி நிரப்பிப் பரப்பி அவர்கள் எடுத்துக்கட்டிக்கொண்டு போக பல நிறமுள்ள கெட்டித் துணிகளால் தைத்த பைகளும் வைத்து திருப்தியுறுவதற்காகக் கேட்கும் பணமுங் கொடுத்து விளக்கமாற்றுக்குப் பட்டுக் கயிறு கட்டி யுபசரித்தாலும் குறை சொல்லும் வழக்கமே யொழிய மனம் நிறைவதில்லை. இந்த மண்ணுங்கட்டி மாமி, மருமகளை அருமைபாராட்டி வைத்துக்கொள்ள அவளுக்கு வரிசை வழங்கித் திருப்தி செய்வது எவர்க்கும் அரிதேயாகும். சம்பந்திகளுக்கு உணவருத்தி யுபசரிக்கவேண்டுமேயல்லாமல் அரிசி பருப்புப் பயறுகளை மூடைக் கணக்கில் மரக்கால் கணக்கில் அளந்து கட்டிக்கொண்டு போகச் செய்வது பெருமையாகுமா? நன்றி பாராட்டப் பெறுகிறதா?

நன்றியறிதலில்லாத சம்பந்தியாளுக்கும் இன்னும் எண்ணிலடங்காத அவசியமில்லாதவைகளுக்கும் பெரியதனக்காரர்கள் செலவு செய்வதைப் போல எல்லாரும் செய்யவேண்டுமென்ற பேராசையே பெரிய நஷ்டங்களுக்குக் காரணமாயிற்று. இவ்வளவு செலவுகளுக்கும் தொலைகளிலிருந்துதான் பணங்கள் வந்து ஆக வேண்டியதிருக்கிறது. தொலைகளிலுள்ள கடைகளில் ஊர்க்கடைப் பற்றுவழி அதிகமாகவே கடைகளின் தொழில்கள் நடைபெற இடையூறுகிறது. செலவோடே செலவாக வெளிநாடுகளிலிருந்து வரவழைத்துச் செலவு செய்த பணங்களுக்கு வருமானவரியும் தொழில்வரியும் கட்டித் தீரவேண்டியதாகிறது.

எல்லாத் துறைகளிலும் கண்மூடித்தனமாய்ப் பொருளைச் செலவிட்டு, செட்டாக வாழுந் தன்மையைச் செட்டியார்கள் கைவிட்டவர்களாகவே காணப் பெறுகின்றனர். எழுதவும் சொல்லவும் இயலாத அளவு செலவினங்கள் பலவாறாகப் பெருகிவிட்டன. இனி

யேனும் செலவு நம்மை அடக்கி விடாமல் செலவை நாம் அடக்கி நல்வாழ்வுறவேண்டும்.

அதற்கு அடிப்படையாக நல்ல கல்வியை ஆண் பெண் இரு பாலாரும் தக்கவாறு கற்று அறிவு முதிர்ச்சி யுடையராதல்வேண்டும். இச்சமூகத்தில் பள்ளி புகுந்த படியாத ஆடவர் எவருமிலர். பிள்ளைகளைப் பள்ளிக்கு வைத்தலும், பிள்ளைகள் படித்துத் தேறக் கிளுக்கெடுத்து தாயார் பிறந்த வீட்டுக்குப் போய்ச் சன்மானம் பெற்று வருதலும் என்றுமுள்ளன. தற்காலத்தில் ஆங்கிலக்கல்வி போகத்தால் தமிழ்க் கல்வி புறக்கணிக்கப்படுகின்றது. தமிழின் பெருமையறிய இலக்கண முறைப்படி நல்லாசிரியர்களைக்கொண்டு பள்ளிகள் நடைபெறவில்லை. மாடுமேய்த்துப் பிழைக்கவும் தகுதியற்ற பலர் உபாத்திமார் எனப் பெயர் பூண்டு பள்ளிகளிற் பாடங் கற்பித்து வருவது பெருங் குறைவும் வெட்கமுமாகும். பயித்துப் பயித்தேநூறு,ஒம்பத்திக்கும்பா எம்போத்தோண்ணு எனப்பயிற்றும் இவ்வுபாத்திமார்களைக் கைக்குச்சியுடன் காடுகளில் மாடுகளைமேய்க்கும்படி விடுத்து நல்லாசிரியர்களை யாய்ந்து அவர்களைக் கொண்டு பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் தகுந்தமுறையில் கல்வி கற்பித்து, அறிவு ஒழுக்கமாதிய வளரச்செய்யவேண்டுவது இன்றியமையாததாகும். ஆண்களை யொப்பப் பெண்களும் வரவு செலவு திட்டங்களை யறிந்திருப்பார்களானால் வருவாய்க்குத் தகுந்த வாழ்க்கை நடாத்தி நலனுற யேதுவாகும்.

எல்லா நன்மைக்கும் ஏற்றபடியாக திருத்தங்கள் மிக மிக வேண்டற்பாலனவே. திருத்தங்கள் செய்ய இதுதான் பக்குவமான காலம். வகைக்கொருமாதிரி, ஊருக்கொருமாதிரி திருத்தங்கள் செய்வதைப் பார்க்கிலும் ஒவ்வொரு ஊர் நகரத்தார்களும் தங்கள் தங்கள் ஊர்களில் கூடி வகைக்கொரு பிரதிநிதிகளைத் தேர்ந்து அனுப்பி எல்லாவூர்ப் பிரதிநிதிகளும் கோயிலூர் ஆண்டவர் சந்நிதியிற் கூடி ஒருமித்துச் செய்யும் தீர்மானங்களை சிறப்பும் உறுதியும் பெறும் மூலத்தை ஆதாரமாக வைத்தே திருத்தங்கள் செய்தல் நலமாகும். சடங்குகளின் காரண காரியங்களை யாராய்ந்து பொருத்தமுள்ளவைகளைக் கொள்ளலாம்; பொருத்தமற்றவைகளைத் திருத்தலாம்; அல்லது தள்ளலாம். விதவா விவாகம், கலப்புமணம் இரண்டும் வியவஸ்தையைக் கெடுப்பனவே. புருஷனிழந்தவள் மறுமணங்கொள்ளலாமெனின் புருஷனிடத்துப் பிரியமில்லையென்றாலும் வேறு புருஷனை மணக்கலாமெனவும் கூடும். ஆடவர் வேற்றுச் சாதியில் பெண்கொள்ளலாமெனின் பெண்களும் வேற்றுச் சாதிப்புருடரை மணக்கலாமெனவும் கூடும். ஜாதி வியவஸ்தைகளை அறவே ஒழிக்கக் கூடிய இவ்விரு செயல்களைப் பற்றி இப்போது தீர்மானிக்க முயன்றால் பெருங் குழப்பங்களே நேரும். ஆகவே, இவ்விரண்டையும் ஒதுக்கி வைத்து எல்லாரும் ஒப்பத் தகுந்த

முறையில் செலவையடக்கும் திருத்தங்களைச் செய்வதே பொருத்தமாகும். பணச் செலவு அதிகரிக்காத வழியே பாதுகாப்புக்குரியதாகும். தக்கவர்கள் முன்வருவார்களாக. தகுந்த வழிகளைக் காட்டுவார்களாக

முதுணரைப் பாண்டியன் அழைத்து வந்தது உபசாரமென்பதும், பிள்ளை கூட்டி பிறந்த பின்னரே சீதனம் கொடுப்பதென்பதும், பெண்ணுக்குப் பணம் வாங்கத் தொடங்கியது அறுபதுவருடங்களேயாகலாமென்பதும் எவ்வித ஆதாரங்களால் அறிந்தீர்கள்? என அன்பர் ஒருவர் வினவியுள்ளார். அவைகட்கு விடையளித்தல் கடமையே. காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்து வருங்காலத்தில் அந்நகரத்தரசன், மானத்தை உயிரினுஞ் சிறந்ததாகக் கருதி, ஒரு தலைக்கு எட்டுக் கலைகளும், எண்ணாயிரம் பொன்னும் கொடுக்க முன்வந்த இவர்களின் மனத் துணிவையும் காவிரிப் பெருக்கைப் பஞ்சப் போகியால் அடைத்தவர்த்தகப்பெருக்கையும், தன் அழைப்புக்கிணங்கி விருந்தருந்த வந்தவர்கள் அங்கு பரப்பும் வாழையிலைகளில் உண்டால் இலை யெடுத்தெறிய நேருமென்னும் முன் யோசனையுடன் பரங்கியிலைகள்கொண்டு வந்து பரப்பி அதில் படைத்த உணவுகளுடன் கூட்டிவைத்த வெந்துபோன இலைகளையும் அருந்தியதையும், வெளிவரும்போது தன்னை வணங்குந் தன்மையில் வரட்டும் என்ற நோக்கத்துடன் உணவுச்சாலையைச் சூழ கிழுவை வேலியடைத்து பள்ளம் வெட்டி நுழைவு (தொண்டிக்) கதவு வைக்கச் செய்து, வரும் வழியில் ஆசனத்தமர்ந்திருந்த துராலோசனையையறிந்து வணங்காமுடியினராகிய இவ்வணிகர் பெருமக்கள் கையால் நகர்ந்து தவழாது காலைநீட்டி அரசன் காலில் மிதிபட ஒவ்வொருவராய் வெளிவந்து அவமானப் படுத்தியதையும், தன்னுடைய பட்டத்து யானையைக் கிட்ட நெருங்காது தூரத்திருந்தபடியே மதித்து நிறுத்தியதையும், மோசமான தங்கத் தகட்டின் மேல் பூச்சுத் தங்கத்திற்கு மாற்றுச்சொல்லியதையும், கோட்டைக்குள்ளிருந்த ஒரு கிணற்றில் தண்ணீர் இறைக்கும்படி கொடுத்த கயிற்றின் நீளம் போதாமைக்கு தம்வீட்டு வெள்ளாட்டியர்பொற்பணிகளை முடிந்து நீரிறைத்ததையும், வீட்டு நிலைகளிலிருந்த வெள்ளிக் கதவங்களைப் பிடுங்கி அரண்மனைக்குக்கொண்டு போய்விட அஞ்ஞான்றே இரவு வருவதன் முன் பத்தரை மாற்றுத் தங்கத்தால் கதவங்கள் செய்து போட்டதையும், பிறவற்றையும் பொறாது கொடுமை புரிந்ததால் அந்நாட்டை வெறுத்தே வெளியேறினரெனவும், பாண்டி மன்னனால் அழைத்துவந்திருப்பின் தலைநகராகிய மதுரைமா நகரத்தில் இடம் விட்டுக் கொடுத்திருக்கவேண்டும் எனவும், பாண்டி மன்னர் வரவேற்றாரென்பதையே அழைத்து வந்தாரென்று உபசார வழக்காகக் கொண்டிருக்கலாமெனவும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

கல்யாண வீட்டில் நாலுநாளைச் சீர்முறைக் கணக்குப் பார்த்து, சீதனப் பணத்திற்கு பெண்ணின் தந்தையாவது அவர் வகையினராவது சீட்டெழுதிக் கொடுத்த அச்சீட்டுக்கு வட்டியுடன் பிள்ளை குட்டி பிறந்தபின் கொடுக்கும் வழக்கம் எனக்கு விவரம் தெரிந்தமுதல் பல ஆண்டுகள் நிலவியது. பெண்ணுக்குச் சீர் வைக்கும் பாத்திர பண்டங்களுக்குப் புருஷன் விலாசம் பிள்ளை குட்டி பிறந்து காப்புக்கட்டுப் புதுமை செய்யுங் காலத்தில்தான் தீட்டுவது. இவ்வழக்கம் இப்போதும் பலரால் கையாளப்பெறுகிறது.

பெண்ணுக்குச் சீதனம் கொடுத்தும் பூஷணம் பூட்டியுமே பெண் வீட்டார் கல்யாணம் செய்து கொடுக்கும் வழக்கத்தை இசை குடிமானம் குறிப்பிடுகிறதனாலும், பெண்ணுக்கு வாங்கின பணங்களைப் பெண்வீட்டார் வகைக் கோயிலார் ஆங்கள் கோயிலுக்குச் சேர்த்து கோயில் கணக்குகளில் பற்றெழுதி வைத்திருந்து வட்டியுடன் வாங்கியவைகளை அறிந்திருக்கிறோமாகையாலும், பெண்ணுக்குப்பணம் வாங்கப்படாதென்ற வரையறையிருந்ததென்பதாம்; பெண்ணுக்குப்பணம் வாங்கும் வழக்கம் தொடங்கியது அறுபது வருடங்களே யாகலாம் என்பதும் துணிபு.

பூங்கொன்றைவேலன் குடிக்கல்வெட்டிலும் துளாவூர்மடத்தில் செப்பேட்டிலும் ஆதாரங்கண்டதாக தேவகோட்டைமேல்வீட்டுத் திருவாளர், சின்னையசெட்டியாரவர்கள் எழுதிவைத்திருந்த பிரதிக்கிணங்க, தஞ்சை சதாவதானம், உயர்திரு, சுப்பிரமணிய ஐயரவர்கள் ஆங்கிலம் 1904ம் ஆண்டில் "நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம்" எனவும், மகிபாலப்பதி திருவாளர், மு. கதிரேசச் செட்டியாரவர்கள் 1911-ம் ஆண்டில் "நாட்டுக்கோட்டை நகரத்தார் சீர்திருத்தம்" எனவும், காரைக்குடி திருவாளர், ராம. சொக்கலிங்க ஐயா அவர்கள் "நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபு விளக்கம்" எனவும், புத்தகங்கள் எழுதி அச்சியற்றிவெளியிட்டுள்ளார்கள் என்றும், அமராவதிபுதூர் திருவாளர், வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியாரவர்கள் "நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம்" என ஒரு புத்தகம் எழுதி அச்சியற்றி வெளியிடவிருக்கிறார்களென்றும், கீழச்சிவல்பட்டி அருட்கவிபாடுவார் திரு, முத்தப்பசெட்டியாரவர்கள் பாடிய "திருமுகவிலாசம்" மற்றொரு புலவர் இயற்றிய "எழுநகரத்தார்பள்" முத்துக்குட்டிப் புலவரவர்களியற்றிய "கண்ணுடையம்மன்பள்" "குழுவ நாடகம்" என்னும் நூல்களும், சங்கநூல்களும், புராண காவியங்களும், மிஸ்டர் திரஸ்டன் துரையவர்கள் எழுதி அச்சேற்றி வெளியிட்ட புத்தகமும், பிறவும் நம்மவர்களின் வரலாறுகளை விளக்குதற்கு ஆதாரமாகவுள்ளன என்றும் தெரிகின்றமையால் அவைகளை யொருங்கே யுணர்ந்து தெளியலாம். இனிச் செய்யவேண்டும் தீர்மானங்களையாராய்வோம்

விரதச் சுவாதி விதி வழி முறையே.

(இட்டமொழி, திரு, சிவசூரிய நாராயண பிள்ளை, பஞ்சாங்க கணிதர்.)

ஆண்டாண்டு அனைத்தும் ஆகியான் ஆகம விதி நூல் வழியாம் விரதாதி விழாக்களை விளக்கி வீர சிங்கார கெம்பீரமாய் உலாவுஞ் சிவநேசா! நீயு நின் ஆசான் மற்று முன் மாண்புடை நேசரோடனைவரும் இதனை இம்முறையே யனுஷ்டித்து எப்பெருமான் கிருபா நோக்கம் பெருக்கமாய் அடைந்து வாழ்க! வாழ்கவே!! எந்நாளும் வாழ்கவே!!!

சீரிய சிவநேசச் செல்வரீர்!

நிகழ விருக்கும் காது வருஷம் புரட்டாசி மாதம் 4-ம் தேதி சனிவாரத்தன்று சுக்கில பக்கச் சதுர்த்தி நிறைந்த நாளாகவும் சுவாதி நக்ஷத்திரம் 53-32 எனவுங் கூடி விநாயக சதுர்த்திக் குரித்தாயிற்று.

அம்மதியில் 31-ம் தேதி வெள்ளி நாளன்று ஆஸ்வீஜ சுக்கிலப் பிரதமை தீபாரோஹண வேளைவரை இலங்குவதோடு அன்றுதித்து நாழிகை 4-38-ன் மேல் சுவாதியுஞ் சேர்ந்தே நவராத்திரி யாரம்பத்திற் குரித்தாயிற்று.

இதன் எட்டாந்தினத்தன்று அஷ்டமி 47-29-ம் உத்திராடம் 33-31மாக மஹாஷ்டமி மறுபகல் சனியன்று நவமி 45—19ம் திருவோணம் 33-15-ம் சூலம் 28-23மாக மஹாநவமி.

"மட்டின் மாயை வடிவின் மலைந்தபின்
னெட்டி லெத்தலைச் சூலத்தி னீக்கினன்."

என்பதிற் காணுஞ் சூலமும் ஆஸ்வீஜ சுக்கில நவமியே மஹா நவமியெனவலியுறுத்துகின்றது. பின்னாள் ஞாயிறில் தசமி 42-4-ம் அவிட்டம் 31-55-ம் கண்டம் 23-7மாக விஜய தசமி.

ஐப்பசி 27ம் தேதி குருநாளன்றுதித்து விநாடி 56க்குமேல் சதுர்த்தசியும், சுவாதியும்கூடி நரகசதுர்த்தசி ஸ்நானத்திற் குரித்தாயிற்று. வெள்ளி விடிந்து நாழிகை 6-10க்கு மேல் அமாவாசையும் வந்து சுவாதியுடன் கூடித் தீபாவளிபண்டிகைக் குரித்தாயிற்று. இன்றே சௌபாக்கியமும் சோபனமும் விளங்கா நிற்கின்றன.

சுவாதியே விரதாதிகளை விளக்கி வருவதுகொண்டு ஆராயுமிடத்து இவ்விரதாதிகளுக்குச் சாத்திரமானமேபொருத்தமாயிற்று. "என்று சுவாதியோ அன்றே தீபாவளி" என்பாரும் சுவாதியின் பெருமை இது போன்ற காலங்கட்கே யேற்ற தென்பதை யுணர்வாராக.

தாதுவருட நாம நிச்சயம்.

(யுவ௵ மார்கழி௴ ௨௯௳ வெளிவந்த
"சோதிடபரிபாலினியி"லிருந்து எடுக்கப்பட்டது.)

இந்து சாதனம் யுவ௵ மார்கழி௴ ௧௧-ம் திகதி வெளியிட்ட உலகப் பலவிதத்தின் கீழ்,

யாழ்ப்பாணப்பஞ்சாங்கங்கள் மூன்றனுள் இரகுநாதையர் பஞ்சாங்கத்தில் தாது வருஷமென்றும், சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்கத்தில் தாதுவ வருஷமென்றும், திருக்கணித பஞ்சாங்கத்தில் தாத்ரு வருஷமென்றும் ஒன்றற்கொன்று திரிபான நாமங்கள் இடப்பட்டிருக்கின்றனவென்றும், இதற்குக்காரணமென்னவென்றும் எழுதப்பட்டிருக்கின்றது.

வருகிற புதுவருஷத்தின் பெயரைத் தமிழில் எவ்வாறு வழங்க வேண்டுமென்று விளக்குவாம்:—

மதுரைக் கடைச் சங்க காலத்துப் புலவராயிருந்து சித்தியும் புகழும் வாய்ந்த இடைக்காடர் என்பவர், அறுபது வருஷங்களுக்கும் தனித்தனி பலன்களைவிளக்கி வருஷத்திற் கொன்றாக அறுபது வெண்பாக்களைப் பாடியுள்ளார். அப்பாக்கள் வருஷாதி நூல் முதலிய சோதிட நூல்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்பாக்களையே பஞ்சாங்ககணிதர்கள் வருடந்தோறும்பஞ்சாங்கத்தில் வருஷ பலனில் வெளிப்படுத்தி வருகின்றார்கள். இப்பாக்களில் பத்தாவது வருஷத்திற்குரிய பாவில், "தாதுவருடந் தராதலத்தோர், வாழ்ந்திருப்பர்" என்று தொடங்கப்பட்டிருக்கின்றது. இதனால் வருகிற புதிய வருஷத்திற்குத் தாது என்றே தமிழில் நாமமிடப் பட்டதென்பது எளிதில் விளங்குகின்றது.

அன்றியும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் பிரசுரித்த தமிழ்ச் சொல்லகராதியிலும், சென்னைச் சர்வ கலாசாலையார் பிரசுரித்து வரும் (Tamil Lexicon) என்ற தமிழ்ப் பேரகராதியிலும், சோதிடப் பேரகராதியிலும், மற்றும் பல தமிழகராதிகளிலும் தாது என்னும் சொல்லுக்கு, "வியாழவட்டமாகிய அறுபது ஆண்டுகளுள், பத்தாவது ஆண்டின் பெயர்" என்று விளக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், "தாதுவ" என்னுமோர் சொல் மேலோதிய அகராதிகளொன்றிலும் குறிக்கப்படவில்லை. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் செய்த பாலபாடம் இரண்டாம் புத்தகத்திலும் வருஷப் பெயர்கள் குறித்த விடத்தில் இப்பத்தாவது வருஷத்தின் பெயர் "தாது" என்றே குறிக்கப்பட்டிருக்கின்றது.

ஆதலின், இற்றைக்குப்பல்லாயிர வருடங்களின் முன்றொடங்கி அறுபது வருஷங்களுள் பத்தாவது வருஷம் தாது வருஷமென்றே வழங்கப்பட்டு வருகின்றதென்பது ஐயந்திரிபறத் தெளிவாகின்றது. இவ்வுண்மையை அறிந்தே நம் முன்னோர்கள் பலரும் பலவட்டங்க டோறும் காலிகிதமாகக்கணித்து வெளிப்படுத்திய பஞ்சாங்கங்களி லும் இப்பத்தாவது வருஷத்தைத் தாது வருஷமென்றே எழுதி யுள்ளார்கள். பிரமஸ்ரீ சந். இரகுநாதையர் அவர்களும் சென்ற வட்டத்து நிகழ்ந்த பத்தாவது வருஷத்திற்குத் தாது வருஷ மென்றே நாமமிட் டச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். இந்தியாவில் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டுவரும் வாக்கிய பஞ்சாங்கங்கள் யாவற்றிலும், திருக்கணித பஞ்சாங்கங்கள் சிலவற்றிலும் இப்பத் தாவது வருஷத்தைத் தாது வருஷம் என்றே வெளிப்படுத்தி வரு கின்றனர். யாழ்ப்பாணத் திருக்கணித பஞ்சாங்கக்காரரும் சென்ற இராக்ஷத வருஷம் வரையும் தமது பஞ்சாங்கத்தில் வருஷப்பெயர் 60-ம் குறித்த விடத்தில் தாது என்றே இதனை வெளிப்படுத்தி வந்து, அதன் பின்னரே "தாத்ரு" என்று மாற்றினர்.

இத் தாது வருஷத்தின் பெயர் வடமொழியில் தாத்ரு என்று சொல்லப்பட்டிருப்பதால் அப்பெயரை அவ்வாறே திருக்கணித பஞ்சாங்கக்காரர் சிலர் வழங்கத் தொடங்கி யிருக்கின்றனர். அஃது வடமொழிச் சொல்லாகுமேயன்றித் தமிழ்ச் சொல்லாகாமையின், அச் சொல் வடமொழிப் பஞ்சாங்கத்திற் கேற்குமே யன்றித் தமிழ்ப் பஞ்சாங்கத்திற் கேலாதென்பது வெளிப்படை.

பருத்தித்துறைச் சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்கத்தில் தாது என்பது தாதுவ எனத் திரிக்கப்பட்டிருக்கின்றது. இதற் கேற்ப இடைக்காடர்வெண்பாவும் "தாதுவவா மாண்டிற் றாதலத் தோர் வாழ்ந்திருப்பர்" எனத் திரிக்கப்பட்டிருக்கின்றது. இத் திரிபு, அவர் பஞ்சாங்கத்தில் விளம்பி வருஷ முதல் இதுகாறும் அறுபது வருஷப் பெயர் குறித்த விடத்துப் பத்தாவது வருஷத் திற்குத் தாதுவ என்று குறித்துவந்தமையால் அதற்கேற்பச் செய் யப்பட்ட தென்பது தெளிவாகின்றது. ஆதலின் அப்பெயர் கொள் ளற்பாலதன்றென்பது துணிபாயிற்று.

ஆகவே, வருகிற புதிய வருஷத்தின் பெயரைத் தாதுவ என்று வழங்குதல் ஒருவாற்றானும் பொருந்தா தென்பதும், தாத்ரு என வழங்குதல் வடமொழி வழக்கிற்கே பொருந்து மென்பதும், தாது என வழங்குதலே தமிழ்மொழி வழக்கிற்குச் சாலச் சிறந்ததென்ப தும் ஐயந்திரிபற விளங்குகின்றன.

கம்ப ராமாயணத்தே ஒரு திருத்தம்.

(காஞ்சீபுரம், திரு, வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியாரவர்கள்.)

"நீரிடை யுறங்குஞ் சங்கம் நிழலிடை யுறங்கும் மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை யுறங்குஞ் செய்யுள்
தூரிடை யுறங்கும் ஆமை துறையிடை யுறங்கும் இப்பி
போரிடை யுறங்கும் அன்னம் பொழிலிடை யுறங்கும் மேகம்"

என்பது கம்ப ராமாயணத்தே நாட்டுப் படலத்தின் பாட்டு ஆறு.

அப்பாவின் இடைத்தாளின் "தாமரை யுறங்குஞ் செய்யாள்" என்ற தொடரினுக்குப் பொருள் கண்டாருள் பலர், அத்தொடரின் ஈற்றிலுள்ள "ஆள்" என்னும் மொழியினைப் பெண்பால் விகுதி யெனக் கொண்டு தாமரை மலரில் இலக்குமி வாழ்கின்றாள் என்று பொருள் கூறினார்கள்.

அச் "செய்யாள்" என்ற மொழியினைச் "செய்யுள்" எனப் பாடங்கொண்டு (உள்-உருபு) "நன்செய் நிலத்தில் தாமரை வாழ்கின்றது" எனப் பொருள் கோடலே சாலச் சிறப்புடைத்தும் கவிக் கருத்தும் ஆம் என யான் எண்ணுகின்றேன்.

நாட்டுச் சிறப்பின் உறுப்புகளில் ஒன்றாகிய நீர்ப் பெருக்கினைச் சிறப்பித்துக் கூறலே மேற்கொண்ட ஆசிரியர் கம்பர், அப்பாவிடையே இலக்குமி தாமரையில்வாழ்கின்றாள் என்று பொருள் பயக்கும்படித் தாமரை யுறங்குஞ் செய்யாள் என்று மற்றொன்று விரித்தல் என்னுங் குற்றத்தின்பாற் படும்படி கூறுவரோ? கூறார். ஆகையால் அத்தொடரில் யாதோ ஒரு வழு அமைந்திருத்தல் கூடும் என யான் ஆழ்ந்து சூழ்ந்தேன். அச்சூழ்வினால் அத்தொடரில் "செய்யாள்" என்ற மொழியின் ஈற்று "ஆள்" என்னும் மொழி பெண்பால் விகுதி அன்றென்றும், அவ்வீற்றில் இடப்பொருள் உணர்த்துவதாகிய "உள்" என்னும் உருபு மொழி இரிந்திருத்தல் கூடும் என்றும் யான் துணிந்தேன்.

அத்துணிபினை யான் பலரிடத்துப் பகர்ந்தேன். அவர்களிற் சிலர் காதிடத்துக் கொள்ளவும் கூசினர். பின் ஒருகால் யான் தஞ்சாவூர்ச் சென்றேன். அவ்வூர் மஹாராஜா அவர்களின் சரஸ்வதி புத்தகக் கூடத்தில் உள்ள ஏட்டுப் புத்தகங்களில் மூன்று புத்தகங்களை ஆய்ந்தேன். (நீரிடை என்ற பாவினைப் பற்றி மட்டும்) அவற்றுள் இரண்டு புத்தகங்களில்தற்போது அச்சுப் புத்தகங்களில் உள்ள "செய்யாள்" என்ற பாடமே இருந்தது. ஒரு புத்தகத்தில் மட்டும் "செய்யாண்" என்றபாடம் இருந்தது. அவ்வேட்டுப் புத்தகத்தே மற்றும் பல பாடமாற்றங்கள் இருக்கின்றன எனக் குறிப்

பும் எழுதப்பட்டிருந்தது. அப்பாட மாற்றத்தினையும், ஏனைய பாட மாற்றங்களையும், பண்டைய நூற்களில் உண்மை அறிய விரும்பி ஆய்வார் பலரும் அறிதற் பொருட்டு இத்திருத்தத்தினை வெளியிட யான் விரும்பினேன்.

ஆசிரியர் கம்பர், அப்பாவிடையே நீர்ப்பெருக்கினைச் சுட்டும் எட்டுப் பொருள்களைக் குறித்தார். அவற்றுள் எழு பொருள்களின் இடையே இடப்பொருள் உணர்த்துவதாகிய "இடை" என்ற உருபு மொழியினை விரித்து உரைத்தார். அவர், தாமரையை நிலப் பொருளாகக் கொண்டிருப்பின் தாமரை யுறங்குஞ் செய்யாள் என்ற தொடரிடையேயும் இடப்பொருள் உணர்த்துவதாகிய "இடை" என்ற மொழியைக் (அல்லது யாதாவதொரு உருபு மொழியை) கூட்டித் "தாமரை யிடை யுறங்குஞ் செய்யாள்" என்று உருபு விரித்தே உரைத்திருப்பர். அவர் அப்படி உருபு விரித்து உரையாமையால், அவ்விடத்தே இலக்குமியைக் குறித்துக் கூற எண்ணினரல்லர். அவர் எண்ணி இருப்பின் (அப்பாவில்) யாப்பு இடந்தராவிடினும் யாப்பிற்கு ஏற்ற பெற்றியின் உருபு விரித்தே உரைத்திருப்பர். (அவர் அப்பாவில் உருபு விரித்தோ தொகுத்தோ இலக்குமி தாமரையில் வாழ்கின்றாள் என்று பொருள் பயக்கும்படி எழுதியிருப்பாராயின் அச் செயல் "அவ்விடத்திற் கேற்பிலாத" மற்றொன்று விரித்தல் என்னுங் குற்றத்தின் பாலேபடும்.)

ஆசிரியர் கம்பர், "அச் செய்யாள்" என்ற மொழியினைச் "செய்யுள்" எனப் பாடங்கொண்டு ஈற்று "உள்" என்னும் மொழியினை வேற்றுமை உருபாகவேனும், "செய்யான்" எனப் பாடங் கொண்டு ஈற்று "ஆன்" என்னும் மொழியை மயக்க வேற்றுமை உருபாகவேனும் கொண்டிருப்பாராயின் "நீரிடை, நிழலிடை, காரிடை", என்றாற்போல "செய்யிடை யுறங்குந் தாமரை" என் றேனும், "தாமரை யுறங்குஞ் செய்யிடை" என்றேனும் எழு தாமை என் எனின், "நீரிடை, தூரிடை, போரிடை" என்ற அடி கட்கு "நிழலிடை, துறையிடை, பொழிலிடை" என்பன மோனைத் தொடை அமைந்தாற்போலத் "காரிடை" என்ற அடிக்குச் "செய் யிடை" என்ற தொடர் முதலானால் மோனைத் தொடையமையாது முரண்படுவதாலும், ஈருநால் ஈறு விளச்சீராக நிற்றலானும் எழுதி லர் போலும். அவர் அந் "நீரிடை" என்ற பாவின் ஏனையமூன்று அடிகளின் ஈறுகளில் மாச்சீர்களையே நிறுத்தினர். ஆதலால், இவ் வோரடியின் ஈற்றில் மட்டும் விளச்சீராகக்கூறினர் எனல் பொருத்த மன்று.

கவிகள் பல ஆயிரக் கணக்கில் பாக்கள் எழுதுங் காலத்தே அவர்கள் நினைத்தபடி எழுதுதற்கு இயலாவண்ணம் (இரண்டோ

ரிடங்களில்) இடையே யாப்பென்னும் பெயரால் ஊறு நேருதலும் உண்டு. அவ்வூறு நேரும் வழக்கினை, ஆசிரியர் சேக்கிழாரடிகள் அருளிய திருநாவுக்கரசுசுவாமிகள் (பெரிய) புராணத்தே நான்காவதாகிய,

"காலெல்லாந் தகட்டுவரால் கரும்பெல்லாங் கண்பொழிதேன்
பாலெல்லாங் கதிர்ச்சாலி பரப்பெல்லாங் குலைக்கமுகு
சாலெல்லாந் தரளநிரை தடமெல்லாஞ் செங்கழுநீர்
மேலெல்லா மகிற்றூபம் விருந்தெல்லாந் திருந்துமனை"

என்ற பாவிலே ஈற்றடியில் ஆசிரியர் நினைத்தபடி எழுதி இருப்பின் "திருந்துமனை எல்லாம் விருந்து" என்று எழுதியிருக்கல்வேண்டும். அவர்கள் அப்படி எழுதாததற்கு யாப்பு இடந்தாமையால் "விருந்தெல்லாந் திருந்துமனை" என எழுதினார்கள். அதனாலும், ஆசிரியர் பெரும்பற்றப் புலியூர் நம்பிகள் அருளிய திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணத்தே குதிரையிட்ட (ஞானோபதேசஞ் செய்த) திருவிளையாடலின் முப்பத்தேழாவதாகிய,

"வயலெலாங் கன்னல் செந்நெல் வனமெலாம் நாகம்பூகம்
அயலெலாந் தேர்விமானம் அவையெலாம் முனிவர் வானோர்
"புயலெலாம் மாடகூடம்" புறமெலாம் வேள்வி யோமம்
"கயலெலாந் தாவும்வாவிக்" கரையெலாந் தவஞ்செய்வோரால்"

என்ற பாவிலே மூன்றும் நான்கும் ஆகிய அவ்விரு அடிகளிலும் ஆசிரியர் தம் (முன்) எண்ணப்படி எழுதியிருப்பின் "மாடகூடம் எல்லாம் புயல்" என்றும், "வாவி எலாந் தாவுங் கயல்" என்றும் எழுதி இருப்பர். அவர் அப்படி எழுதாததற்கு யாப்பு இடந்தாமையால் "புயலெலாம் மாடகூடம்" என்றும், "கயலெலாந் தாவும் வாவி" என்றும் எழுதினார்கள் அதனாலும் நாம் அறியலாம்.

"தாமரை யுறங்குஞ் செய்யாள்" என்ற தொடரின் "செய்யாள்" என்ற மொழியின் ஈற்று "ஆள்" என்னும் மொழியினைப் பெண்பால் விகுதியெனக் கொள்ளாமல் அச் "செய்யாள்" என்ற சீரைச் "செய்யுள்" அல்லது "செய்யான்" எனப் பாடங்கொண்டு (ஈற்று "உள்". அல்லது "ஆன்" என்னும் மொழியினை வேற்றுமை உருபாகக்கொண்டு) எழுதியிருப்பர்; ஆசிரியர் கம்பர் எனக்கோடல் பொருத்தமாகும். அச் "செய்யாள்" என்ற மொழியினைச் "செய்யான்" எனப் பாடங்கொண்டு ஈற்று "ஆன்" என்னும் மொழியினை மயக்க வேற்றுமை உருபாகக் கோடலினும் "செய்யுள்" எனப் பாடங்கொண்டு ஈற்று "உள்" என்னும் மொழியினை வேற்றுமை உருபாகக் கோடல் ஏற்புடைத்தென யான் எண்ணுகின்றேன்.

ஆசிரியர் கம்பர், தாம் தமிழ் மொழியால் இராமாயணம் எழுதுதற்குச் சிந்தாமணி என்ற காவியக் கடலில் (காவிய அழகில்) ஒரு அகப்பை முகந்து கொண்டேன் என்று அவர் சொல்லியதாக உலாவும் மொழியினை நம்பிய அவரின் பின்னாசிரியர்கள் அல்லது நூற்பதிப்பாசிரியர்கள் சீவக சிந்தாமணியின் விமலையார் இலம்பகத்தே இரண்டாம் பாவின் "தாமரை யுறையுஞ் செய்யாள்" என்ற தொடரினைக் கண்டு அத்தொடரினையே ஆசிரியர் கம்பர் தாமும் முன்னோர் மொழியெனக் (ஆசிரிய வசனம் என) கொண்டிருப்பர் என்று மயங்கினர் போலும். சீவக சிந்தாமணி என்னும் நூலுள் "தாமரை யுறையுஞ் செய்யாள்" என்று உரைத்துள்ள தொடரின் இடமும் பொருளும் வேறு. ஆசிரியர் கம்பர் "தாமரை யுறங்குஞ் செய்யுள்" என்று கூறிய தொடரின் இடமும் பொருளும் வேறு என்பதனை மறவாமல் ஆய்வார் உண்மைப் பாடத்தினை அறிவர்.

அந் "நீரிடை" என்ற பாவிடையே "செய்யாள்" எனப் பாடங்கொண்டு (ஈற்று "ஆள்" என்னும் மொழியினைப் பெண்பால் விகுதியெனக் கொண்டு) "தாமரையில் இலக்குமி வாழ்கின்றாள்" எனப் பொருள் கோடல் எவ்வகையானும் பொருத்தமின்று. ஆதலால் அது கவிக் கருத்தன்று. அச் "செய்யாள்" என்ற பாடம் எடெழுதியவர்களால் நேர்ந்த பிழையாகும் (அச் "செய்யாள்" என்ற சீரைச்) "செய்யுள்" எனப் பாடங்கொண்டு "நன்செய் நிலத்தே தாமரை வாழ்கின்றது" எனப் பொருள் கோடலே சாலச் சிறப்புறப், பொருத்தமும், கவிக் கருத்தும் ஆகும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

ஒரு திருத்தம்.

இவ் ஆண்டு "சிவநேசன்" 86-ம் பக்கத்தே என்னால் எழுதப்பட்ட "சூடாமணிநிகண்டில் ஒரு பாவின் திருத்தம்" என்ற கட்டுரையில் வைணவ சமயத்து ஆழ்வார்களும் "சீவரர்" என்றேகுறித்தார்கள். என்ற தொடரில் "சீவரர்" என்ற பெயரைத் "துவரிக்க ஆடையர்" என்று திருத்திப் படித்துக் கொள்ளக் கோருகிறேன். "சீவரர்" என்று ஆழ்வார்கள் குறிக்கவில்லை. யான் தவறாக எழுதினன் போலும்.

— —

சென்னை நகராண்மைக் கழகக் கல்வித்துறைத் தலைவர் திருவாளர், ச. சச்சிதாநந்தம் பிள்ளை B A; L T. அவர்களைப் பாராட்டிய கவிகள்.

(அவர்கள் 1935-ளு டிசம்பர்மீ கிறிஸ்துமஸ் விடுமுறையில் சென்னைப்பல்கலைக் கழகச் 'செனேட்' மண்டபத்தில் உயர்தரப் பள்ளிக்கூடங்களில் தமிழ்ப் பாடம் போதிக்கும் முறைபற்றிய விரிவுரையாற்றியபோது)

போளூர் போர்டு உயர்தரபாடசாலைத் தமிழ்ப்பண்டிதர், திரு, வி. சாமிநாதப் பிள்ளை அவர்கள் கூறியன.

உச்சிதமா நந்தமிழை யோதுவிக்கு நன்முறையைச்
சச்சிதா நந்தப்பேர்த் தண்ணளியோன்—மெச்சும்வகை
ஓதி யுணர்த்தி யுதவினன் வாழியென்றும்
ஆதி பகவனரு ளார்ந்து. (க)

மறையிற் சிறந்தது வள்ளுவர் மாமறை மாண்புநிறை
பிறையிற் சிறந்தது மூன்றாம் பிறையவை போற்பிறங்கு
துறையிற் சிறந்திடு தென்றமிழ் போதிக்குந் தூய்மைமிகு
முறையிற் சிறந்தது சச்சிதா நந்தன் மொழிமுறையே. (உ)

அன்றொருசச் சிதாநந்த னாலுற்கீழ் நால்வருக்கே
யருளிச் செய்தான்
இன்றொருசச் சிதாநந்த னாலுற்கீழ்த் தென்முகமா
விருந்த நேகர்க்
கொன்றுமுள தென்றமிழைப் போதிக்கு மெழின்முறையை
யினிதுரைத்தான்
நன்றறிசெந் நாச்செல்வீர்! இருவர்தமி லெவனதிகள்
நவிலு வீரே. (ங)

குறிப்பு:— (1) சச்சிதாநந்தன்—அரன் — சிவன்.
சச்சிதாநந்தன்—நரன்—(பொருள் வெளிப்படை.)

(2) ஆல் கீழ்—கல்லால மரத்தின் கீழ்
ஆல் கீழ்—ஹால் (செனெட் Hall) மண்டபத்தில்
(திசைச்சொல்)

(3) தென்முகம்-தெற்குநோக்கியமுகம் (தக்ஷிணாமூர்த்தி)
தென்முகம்—(அழகியசுமுகம்) தெற்குமுகமுமாம்.

(4) நால்வர்—(சனகாதியர்) நால்வர்
அநேகர்—(பண்டிதர்) பலர்.

சமய முக்தி.

(யாழ்ப்பாணம் தமிழ்ப்பண்டிதர், திரு, வ. மு. இரத்திநேசுவரையரவர்கள்.)

பெரியோர்களே!

இங்கே கூறப் பெறுவது சமயத்திற் கேற்பக் கூறும் முக்தி யன்று. சைவசமயத்திற்குரிய தான சமயகுரவர்கள் அடைந்த உத்தம சித்த விகாரமற்ற வீட்டின்ப நெறியைப் பற்றிச் சில வசனத் தொடைகளை ஈண்டுத் தருவாம்.

வீண் விவாத வசனங்களால் இடக்கை நிரப்பாதும் நிரப்புரை தொடுக்காதும் தெளிந்த பெரு நூல்களின் பிரமாண சகிதம் மறுப்புரைப்பதே உண்மையறிஞர் கடப்பாடாகும். யாம் புது மதிப்புக்கு ஆவல் கொண்டு இதுவரையும் நடக்கவுமில்லை; இனிமேல் நாம் நடப்பதாகப் பறைசாற்றவுமில்லை. "அன்ன பூரணம்" என்று பேரிருந்து வறுமை வாழ் வெய்தியாங்கு ஞானம் என்ற பேரைச் சூட்டி அஞ்ஞானந் திகழ நடப்பதே புதிய கொள்கையாகும்.

சுருதியுக்தி அனுபவங்கள் பிரமாணமாகவே எடுத்தகொள்கையைத் தொடுத்து முடிக்கவேண்டும்.

நலம்பயவாத பழையன கொள்ளலும், நலம் பயக்கும் புதியன விலக்கலும் பொருத்தமின்று.

சைவசமயத்தில் சரியை, கிரியை, யோக, ஞானப்படிகளும்; சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியபதவிகளும்உள்ளன. சாயுச்சிய பதவியே சிறந்தது. இது உண்மைச் சைவ சித்தாந்த நூற் கருத்து. முத்தியில் சதேக முத்தி, விதேக முத்தி என இரண்டாகவும் விரித்து விளம்புவர். சதேக முத்தி விசிட்டம் என்றால் யாரும் வெறுப்படைய வேண்டாமே!

இனிச் சைவ சமய குரவர் பெற்ற பேரின்பமாகிய உண்மை முத்தியை ஆராய்ந்தால் பெரும்பயனடையலாம். திருஞானசம்பந்த சுவாமிகள் திருமணங் காணிய வந்தாரையுங் கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றையும் பிடர் பிடித்துத் தள்ளித் தூல உடலுடன் ஜோதியுட்புக்கு மறைந்தருளினர். திருநாவுக்கரசு சுவாமிகள் அப்பூதி யடிகளார்க்கு மெய்ப்பூதியளித்துத் திருப்புகலூரில் சிவலிங்கச்

சோதியுட் சேர்ந்து ஊனுடல் மறையப்பெற்றார். மாணிக்க வாசகப் பெருமான், சிதம்பரசிவத்துடன் கைகாட்டித் தமதுருவங் காட்டாமல் மறைந்தருளினார். சுந்தரவள்ளலார் முதலைவாய்ப் பிள்ளைகாட்டிக் கைலை நண்ணினார்.

"ஈனமிருந்துள தோலு மென்பு நரம்புஞ்சீயு
மானவுடல் சிவரூபமா மிதனைத் தெளியாமல்
ஊனுடலுக் கிரைதேடி யுழன்றலகிற் றடுமாறி
மாநரகிற் புகுதுமதோ மாயைவலைப் படுவார்கள்."

இச்செய்யுட் பொருள் வெள்ளிடை மலையாம். ஆகவே, பிணமாகி உடல் விழாது சிவமாகி அத்துவித மடைதலே உயர்முத்தியாகும். சிவோகம்பாவனை, தத்துவமசி முதலியவற்றையும் ஆராய்க. இவ்வுண்மைகளைச் சைவ சமயிகள் அறியக்கடவர்.

கந்த புராணத்துக் காப்புச் செய்யுளின் விபரீதவுரை.

"சிவநேசன்" '௯-ம் ஆண்டு ௬-ம் திங்கள் வெளியீட்டில் 79-ம் பக்கத்து வந்த விளக்கவுரை மனத்துளக்கத்தைத் தந்தது.

யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் மாணவகரின் மாணாக்கனாகிய யான் இவ்வாறான ஒரு புத்துரையை இப்பொழுதுதான் படிக்க நேர்ந்தது. உரையாசிரியர்களும் இப்படிக் கூறும் பொருள் அமைப்பை அறிந்திலர் போலும்!

திகழ் தசம் கரச்செம்முகம் ஐந்து உளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகடு அசக்கு அரவின் மணியா உறை
விகடசக்கரன் மெய்ப் பதம் போற்றுவாம்.

*(விளங்குகின்ற பத்துத்திருக் கரங்களையும், ஐந்துதிருமுகங்களையும் உடைய சிவபெருமானது (பூமியாகிய) தேருக்குச் சக்கரமாகவும், தாமரைக்கு நாயகனாகவும் விளங்குஞ் சூரியன் வயிற்றின்கண் கட்டிய சிரோரத்தினமாக உறையப்பெற்ற விகடசக்கர விநாயகரது மெய்ம்மையான திருவடிகளைத் துதிப்பாம்.)

இக்கருத்தே செம்மையுடையது; ஆன்றோர் வழக்கிலுள்ளது. விரிவுரைத்தலும் வேண்டாம். பேரறிஞர்கள் மௌனமுறாது கருத்தை வெளியிடின் உலகினர் மகிழ்வர்.

உ

பாராண்ட நம் மன்னர் பிரிவு.

(காஞ்சீபுரம், போர்டு உயர்தர ஆண்பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு, S. V. கோதண்டராமய்யர் அவர்கள்.)

உலகத்தில் நிகரில்லாக் கீர்த்திபெற்ற மாட்சிமை தங்கிய நமது ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியார் அவர்களின் காலம் 1936-ம் வருஷம் ஜனவரி மீ 20உ இரவு 11-55க்கு முடிவு எய்தியது.

இவர் உலகத்திற்கே தாய் போன்று கருணை செலுத்தி அன்பின் பெருக்கினால் உலக முழுவதையும் அகமகிழ்வித்தார். இதனால் நமக்கு மாத்திரமன்று; ஏகாதிபத்தியம் முழுவதுமே துக்கம் பெறுகின்றது; பிரிட்டிஷ் அரசாங்கத்தவரின் விரோதம்பெற்று சமாதானம் உற்ற ஹிட்லர் முதலிய ஜர்மன் அரசர் முதல் அமெரிக்கா பிரஸிடெண்ட், ரோஸ்வெல்ட் மொஸோலினி முதலிய சர்வதேசத் தலைவர்களும் தமது விசனகரமான அநுதாபச்செய்திகளை அனுப்பியுள்ளார்கள். உலகமுழுவதும் மன்னர்பிரானின் குணாதிசயத்தைப் பாராட்டித் துக்கத்தில் மாழ்கின்றன; ஒவ்வொரு ராஜதானியிலுள்ள சர்க்கார் ஸ்தாபனங்களும், இதர பொது ஸ்தாபனங்களும் மூடப்பட்டுத் துக்கம் தெரிவிக்கின்றன. நிஜாம் மன்னரின் பொன் விழாவும் இதைமுன்னிட்டே ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. மகாத்மாஎன்கிற காந்திஜியும் வைஸ்ராய்மூலம் அரசகுடும்பத்திற்குத் தம்துக்கத்தைத் தெரிவித்திருக்கிறார்; காங்கிரஸ் தலைவர்கள் முதல் துக்கம் தெரிவிக்கிறார்கள் என்றால் இவரது காருண்யம் எம்மட்டென்று நாம் வரையறுப்பது?

சாஸ்திரோக்தமாக நாம் ஆராயின் நமது தேச அரசர்கள் எப்பொழுதும் (எந்த யுகத்திலும்) ஸ்ரீ விஷ்ணுவின் அம்சம் பெற்றவர்களாகவே இருந்தார்களென்பதும் இருப்பார்களென்பதும் திண்ணம். ஏனெனில்? உலக ரக்ஷகம் விஷ்ணுவினுடையதே; இதை எல்லோரும் அங்கீகரிப்பர். அவருடைய பிரதிநிதியாகத் தோன்றிய நமது மன்னர் பெருமான் அவர்கள் சாண்டிரிங்ஹாம் அரண்மனையில் சரீரத்தை நீத்தார். நீங்குங்கால் மகாராணியாரும், வேல்ஸ் இளவரசரும் யார்க் பிரபும், அரச குமாரியும், ஹெண்ட் பிரபும் இருகிலிருந்தனர்.

நல்ல மதிப்புப் பெற்று சந்திர வம்சத்தரசர்முதலாகப் புகழுடன் அரசாட்சிசெய்த அஸ்தினபுரி என்னும் டெல்லியில் 1911ம் வருஷம் டிசம்பர் மாதம் 12ந் தேதி கியாதியுடன் முதலாவதாக முடி பூண்ட மன்னர் பிரான் இவரே. இத்தகைய ஜார்ஜ் மன்னர் அவர்கள் ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்திக்கும் அலெக்ஸாண்டரியா மகாராணிக்கும் பிறந்த இரண்டாவது குமாரர். பட்டத்தை எதிர் பாராதிருந்தும் இவரது தமையனார் கபவாத சுரத்தால் இறந்து விட்டதால் இவர் பட்டம் பெற்றார். தமயனுக்கென்று நிச்சயித்திருந்த பிரின்ஸஸ் மேரியையே மணந்துகொண்டார். அவ்வம்மையாரும் மன்னருக்கேற்ற மனைவியே. தம்முடைய பெருமையையும் மகுத்துவத்தையும் சற்றும் பாராட்டாமல் தையல் வேலையிலேயே மிகவும் ஆர்வமுள்ளவராக இருப்பவர். அணுவளவும் தம் அரசியலில் கோணுதலின்றி அரசு புரிந்துவந்த நமது சக்கரவர்த்தியின் தேகம் 28—1—36 செவ்வாய்க்கிழமைதினம் பஞ்சபூதங்களி லொன்றாகியபிருதிவியில் ஐக்கியம் செய்யப்பெற்றது. பாராண்ட நம் மன்னர்பிரிவு பெரிதும் வருந்தற்பாலதே.

குறிப்பு:— மகிமை பொருந்திய சார்ஜ் மன்னர்பெருமானாரின் இன்னுயிர் அமைதியுற்று இன்புறவும் அவரின் பிற்றோன்றல்கள் முறையே அரசு புரிந்து இருநிலம் புரந்து பெருமை பெற்று நெடிது நிலவவும் "மண்ணொரு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை" எண்ணி இறைஞ்சி அவ்வண்ணலாருளை வேண்டுவோமாக. (ப—ர்.)

சிவநேசனுக்கு வாழ்த்து.

(போளூர், போர்டு உயர்தரபாடசாலைத் தமிழ்ப்பண்டிதர், திரு, வி. சாமிநாதபிள்ளை அவர்கள்.)

பவநேசம் போக்கியிப் பாருலகி லென்றுஞ்
சிவநேச மாக்கித் திகழுஞ்—சிவநேசத்
திங்கட்டா ளெங்குஞ் சிறந்து விளங்குகநந்
திங்கட்டாங் கீசனருள் சேர்ந்து.

திருப்புகழ் ஆசிரியர் அருணகிரிநாதர்

குலத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள்.

சைவ சித்தாந்த மகா சமாஜ அடக்கவிலைப் பதிப்பாக அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் முதலிய அருள் நூல்கள் சமீபத்தில் வெளிவந்துள்ளன. அப் பதிப்பில் அருணகிரிநாதர் சரித்திரமும் நூலாராய்ச்சியும் அச்சமாஜ காரியதரிசி திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டுள்ளன. அதில் அருணகிரிநாதர் குலத்தைப் பற்றிய ஆராய்ச்சி வருமாறு:—

“அகத்திய முனிவர் வளர்த்த நாய் ஒன்று தேவேந்திரனாகிப் பிறகு அருச்சுனன், கண்ணப்பநாயனார், நக்கீரர், பொய்யாமொழிப் புலவர் ஆகிய பிறவிகளெடுத்துக் கடைசியாக அருணகிரிநாதராக அவதரித்ததென்று வண்ணச் சரபம் ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகளியற்றிய அருணகிரிநாதர் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இச் சுவாமிகட்கு இச்செய்தி முருகவேளால் உணர்த்தப்பட்டதாகவே இப்புராணம் கூறுகிறது..................முற்றுந்துறந்த பட்டினத்தடிகள் தலயாத்திரை செய்து திருவண்ணாமலை சென்றபோது, முத்தம்மை யென்ற உருத்திர கணிகையைத் திருக்கோயிலிற் கண்டு மயங்கி அவள்மீது அடங்காக் காதல் கொண்டு, அவளைக் கலவிக் கழைப்ப, அவள் மறுத்து ஓட, தமக்கு வெளிப்பட்ட சுக்கிலத்தை அடிகள் ஓரிலைக் கலத்திற் பெய்து வைக்க, முத்தம்மையின் தாய் தன்மகளைக் கடிந்து அழைத்து வந்து அடிகளிடம்விட, அடிகள் இலைக்கலத்தைச் சுட்டிக் காட்ட, முத்தம்மை அதிலிருந்த சுக்கிலத்தை விழுங்கி, கருத்தரித்து சூல் முதிர்ந்து அருணகிரிநாதரையீன்றாளென்ற வரலாறும் மேற்கூறிய அருணகிரிநாதர் புராணத்திலேயே கூறப்படுகின்றது. இவ்வரலாறு, உண்மை ஒரு சிறிதும் கலவாத முழுப்பொய் யென்பதில் யாதொரு ஐயமுமில்லை. அருணகிரிநாதர் உருத்திரகணிகை யொருத்தியின் புதல்வர் என்று பொதுவாகப் பலராலும் கூறப்படும் செய்தியும் பொய்யேயாம்............ உருத்திர கணிகையர் வகுப்பைச் சார்ந்த ஓர் அம்மையாரையும், காமவிடாய் மிகுந்து தூய்மைமிக்க சிவாலயத்தில் ஒரு கணிகையைக் கலவிக்கழைத்து வெளிப்பட்ட சுக்கிலத்தை இலைக் கலத்திற் பெய்து வைத்த ஒரு துறவியையும் சீலமுள்ளவரென எவரும் கருதார்.........அருணகிரிநாதர் வடசொற்களை மிகுதியாக உபயோகித்தல், இராமர், கிருஷ்ணர் வரலாறுகளைமிகுதியாகத் திருப்புகழிற் கூறுதல் முதலிய சில காரணங்களைக் கொண்டு, சில ஆரிய அன்பர்கள், அருணகிரிநாதர் ஓர் ஆரிய அந்தணரென்று சில ஆண்டுகளாகக் கூறிவருவதாகத் தெரிகிறது. இக்கொள்கைக்கும் போதிய ஆதாரமில்லை...... ..இராமர், கிருஷ்ணர் வரலாறுகளைத் திருப்புகழ்மிகுதி

யாகக் கூறுவது அருணகிரிநாதரது சமரசக் கொள்கையைக் குறிக்குமேயன்றி, அவரது குலத்தைக் குறிக்காது..... மேலும் 586-வது பாடலில் வரும் "தந்திலன்" என்ற சொல்லுக்குச் சில பதிப்பாளர்கள் "நூலில்லாதவன" என்று கூறும் உரைக்குறிப்புப் பொருந்துமாயின், இவர் உபவீதப் தரியாத [illegible]ருணத்தினர் என்பதும்கொள்ளக்கிடக்கும். எனவே, தமது குலத்தை உயர்ந்ததாக 524, 1128 முதலிய பாடல்களிற் கூறும் இவர் தமிழ் மக்களுள் உயர்ந்த குலமாகக் கருதப்படும் சைவ-வேளாள மரபினராக இருந்திருத்தல் கூடும்............ மேலே விவரிக்கப்பட்ட ஆராய்ச்சியின் முடிபாக அருணகிரிநாதர் உருத்திரகணிகையர் வகுப்பில் உதித்தவரல்லரென்பதும் சைவ வேளாள வகுப்பினராக இருந்திருத்தல் கூடுமென்பதும் புலனாகும்" நிற்க,

காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் பதிப்பில் திரு, கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் முன்னுரையில், "அருணகிரிநாதர் பதியிலார் குலத்தைப் பழித்துப்பாடுவதனால் அவர் அம்மரபினைச் சார்ந்தவரென்று.........கூறுவதற்குத் தக்க சான்றுகள் இல்லையாம்...... அன்றியும், அருணகிரிநாதர் பட்டினத்தார்க்குப் பிறந்த புதல்வன் எனவும் கூறுகின்றனர். இது பட்டப்பகலை இரவென்று கூறிடும் பாதகத் தன்மையாகும். பட்டினத்தார் இகழ்ந்த காலம் பத்தாம் நூற்றாண்டாகும். அருணகிரியார் காலம் பதினைந்தாம் நூற்றாண்டாகும். அங்ஙனமிருப்ப அருணகிரியார் பட்டினத்தார்க்குப் புதல்வராதல் எங்ஙனம்?......அன்றியும், பட்டினத்தார்க்கு இல்லாத தீயொழுக்கத்தை அவர் தலையில் சுமத்துவதுபெரும்பழியாகு மன்றோ......... காஞ்சிப்பிள்ளையார் பாளையத்தில் மூகண்ட முதலியாரும் அவர்தம் மனைவியாராகிய கற்பிற்சிறந்த முத்தம்மையாரும் மகப்பேறு வேண்டி, தலயாத்திரை செய்து, திருவண்ணாமலையை அடைய, அண்ணாமலையார் அருளால் அருணகிரிநாதர் அவதரித்தனர் எனவும் சிலர் கூறுவர். எஃது எப்படியாயினும் அவர் ஒரு பழந்தமிழ்க்குலத்தினர் என்பது திண்ணம்". என்றுஎழுதியுள்ளார்.

அருணகிரிநாதர் தமது குலத்தை உயர்ந்ததாகக் கூறுவதாலேயே அவர் தமிழ் மக்களுள் உயர்ந்த குலமாகக் கருதப்படும் சைவவேளாள மரபினராக யிருந்திருத்தல் கூடும் என்றது ஒரு சிறிதும் பொருந்தாது.

தமிழ் மக்களுள் சைவவேளாள மரபை உயர்ந்த குலமாகக் கருதுவோர் யார்?

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

ஒரு தமிழன்.

ஆலய வழிபாடு.

(ஐயங்கார்குளம், சைவபுராணிகர்,
திரு. அ. க. பொன்னுசாமி முதலியாரவர்கள்.)

சர்வ வியாபகமுள்ள கடவுள் ஆலயத்தில் தயிரில் வெண்ணெய் போலவும் ஒழிந்த மற்ற இடத்தில் பாலில் நெய்போலவும் விளங்குவர். ஆகலின் எச்சமயத்தாரும் கடவுளை வணங்குவதற்கு ஆலயத்தை விசேடத்தானமாகக் கொள்வர். "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவையெம்மன்னையாரமுதமொழி. தொன்றுதொட்டு சைவ சமயத்தவர் ஆலய வழிபாடு கைக்கொண்டு பயபக்தியுடன் செய்துவந்தார்கள். கால கதியால் அந்நியநாட்டு நாகரீக மேலீட்டினால் இந்த நியதி குறையத் தொடங்கியிருக்கின்றது. ஆலயத்திற்குச் செல்வோர் குறைவில்லையாயினும் நோக்கத்தில் வித்தியாச மேற்படலாயிற்று. கடவுளை மெய்யன்போடு வழிபடச் செல்வோர் சிலரினுஞ் சிலராவர். பலர் பலவேடிக்கை பார்க்க, நாடகம் பார்க்க, கூட்டங் காண, பொருட் காட்சிகாண, சுற்றமித்திரரைக் காண, வாணவேடிக்கைகாணச்செல்வோர்போலமிக்க ஆடம்பரத்துடன் செல்கின்றனர். பெண்களோ கடவுள் பக்தியிலும் ஆலய வழிபாட்டிலும் சிறந்தவர்களாக இருந்தார்கள். ஆலயத்திற்குப் போதல், சிவபுராணங் கேட்டல், விரதங்காத்தல், திருக்கோயிலிலே திருத்தொண்டு செய்தல் முதலிய நியமங்களையுடையராயிருந்தார்கள். இப்பொழுதும் ஆலயத்திற்குச் செல்கின்றுகளென்றாலும் வேடிக்கையாக, தாங்கள் நவீனமாகப் பெற்ற ஆடையாபரணங்களை உபயோகிக்க, சிறுவயதில் தங்களுடன் கூடிப்படித்த சிநேகிதைகளைக் காண, தங்கள் கணவனைக் கொண்டு புதிய சேலை வாங்க, புதுமாதிரியான நகைகளை வாங்க, குதிரைவண்டி மோட்டார் முதலியன ஊர்ந்து செல்ல, மட்சட்டி, சாடி, மரவை, கற்சட்டி, அல்மோனியப் பாத்திரங்கள், கண்ணாடி, சீப்பு, பூசுமா, கடிதமலர், முடிமயிர் முதலியன வாங்க, பிறரணிந்துவரும் ஆடையாபரணம் கலைமுடித்தல் முதலியன பார்க்க, தாங்களும் அவ்வாறு அணிய, உடுக்க, முடிக்க, நடக்கக்கருதியேசெல்கின்றனர். பயபக்தியின்றிப் பல நோக்கங்களுடன் பெண்பாலாரும் ஆடவரும் செல்லத்தலைப்பட்டமையால் ஆசாரமின்றிக் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டது போல் புண்ணியந் தேடச் சென்று பாவத்தையடைய வழிபண்ணிக்கொள்கின்றனர். ஆடவரில் ஆங்கிலம் படித்த சிலர் இப்போதுதான் இங்கிலாந்திலிருந்து இறங்கினர்ப் போல் சட்டையிட்டுக்கொண்டும், காலில் பூட்ஸ் போட்டுக்கொண்டும், தமிழ்ப் பாஷையையும் தாய்நாட்டையும் மறந்து ஆங்கில மொழியுடன் ஆலயம் செல்கின்றனர். இன்னுஞ் சிலர் ஆலயங்களைக் கட்டிப் பொருளை வீணாகச் செலவு செய்வானேன்? படிபடியாகப்

பால் தயிர் முதலியவைகளைக் கல்லின்மீது கொட்டி வீணாக்குவானேன்? என்றெல்லாம் பிதற்றி ஆலயவுண்மை சிவலிங்காதி திருவுருவங்களின் சிறப்பு முதலியனவொரு சிறிதும் உணராது ஒப்பாரியிடுகின்றனர்; தேச பாஷா ஞானம் முயற்கோட்டினராய் தாங்களே முற்றுமுணர்ந்தவராய் வீம்மதம்பேசி மனப்பால் குடிக்கின்றனர்.

ஆலயத்திற்குப் பயபக்தியுடனே செல்கின்றவர் சிலராவர். அவர்கள் செல்லும் ஒதுக்க பதுக்கத்தாலும் ஆசாரனைட்டிகத்தாலும் ஆடம்பரமின்மையாலும் அவர்களை நன்கு அறியத்தக்கதாகவிருக்கும். அனைவரும்நமது சமயகுரவர், சந்தானகுரவர் ஆகிய பெரியோர்கள் அருளியதேவாராதி தோத்திரங்களை, சித்தாந்தசாத்திரங்களை யுணர்ந்து மெய்ப்பக்தியுடன் ஆலயவழிபாடு செய்ய ஆண்டவனருள்வாராக.

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

ஆங்கிலர்களிடத்தில் தாம் கண்ட பெருமை யாது என்று ஒருவர் சுவாமி விவேகானந்தரை வினவினார். கீழ்ப்படிந்து நடக்கவும்; அதே சமயத்தில் சுவாதீனத்தைப் பறிகொடாதிருக்கவும் ஆங்கிலர்கள் கற்றிருப்பது அவர்களிடத்தில் உள்ள உயர் தன்மையென்று சுவாமிகள் பதில் விடுத்தார்.

பிறருக்குப் புத்திமதி புகட்டுவதைக்காட்டிலும் தானே புத்தி மதி பெறுவது நலம்.

வெளி விஷயங்களில் இன்பம் துய்ப்பவனும், இந்திரியங்களை அடக்காதவனும், மட்டுக்குமிஞ்சி உண்பவனும் சக்தியற்றுச் சோம்பித் திரிபவனும், மரணத்தின் வசம் தன்னை ஒப்படைத்துவிடுகிறான். ஆணிவேர் அற்ற மரத்தைப் புயல் காற்றுத் தாக்குவது போன்று மரணம் அவனைத் தாக்குகிறது.

வெளிவிஷயங்களில் இன்பம் நாடாதவனும், இந்திரியங்களை வென்றவனும், மட்டுடன் உண்பவனும், சுறுசுறுப்புடன் வேலை செய்பவனும் மரணத்தை வெல்லுகிறான். கற்பாறை காற்றில் அசையாதிருப்பது போன்று அவன் அமைதியுடன் மரணத்தை ஜயிக்கிறான்.

தீரன் ஒருவனுக்குப் பெரியது என்பதும் சிறியது என்பதும் இல்லை. அனைத்தையும் ஒரே பாங்குடன் அவன் பார்க்கிறான். அவன் எல்லாம் வல்லவன். ஏனென்றால் பரிபூரணத்தில் அவன் நிலைநிற்கிறான்.

தூய்மையும் தெய்வத்தன்மையும் ஒன்றேயாம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.